## நான்காம் நாள்

## நோயாளிகளுக்காகச் செபிப்போம்

**முன்னுரை** :

இருப்பவராகிய தந்தையையும், இணைப்பவராகிய மகனையும், இயக்குபவராகிய தூய ஆவியையும் போற்றுவோம்... புகழுவோம்...

**நம்பிக்கை என்பது......**

காணமுடியாதவற்றைக் காண்பதும்,
உணரமுடியாதவற்றை உணர்வதும்,
செய்ய முடியாதவற்றைச் செய்வதும் ஆம்

பார்க்க முடியாத கடவுளைக் கண்டு, உணர முடியாத தெய்வத்தை உணர்ந்து, செய்ய முடியாத காரியங்களைச் செய்வதுதான், இப்பிரபஞ்சத்தின் வெளிப்பாடு. பிரபஞ்சப் பேரன்பில் இணைந்து, ஆண்டவரின் ஆசீரைப் பெற்று அன்னை மரியின் உடனிருப்பை உணர்ந்து வாழ, வாழ வைக்க இன்றைய நான்காம் நாள் நவநாளில் நோயாளிகளுக்காச் செபிப்போம்.

கேட்போம்.... நம்புவோம்..... பெறுவோம்..... பிரபஞ்சத்திடம். பிரபஞ்சத்தில் உள்ளதைத் தான் நாம் கேட்கப்போகிறோம். எங்கோ அவையிருந்தாலும் பிரபஞ்சம் அதைக் கொண்டு வந்து நம்மிடம் சேர்க்கும். அது சேர்க்கும் என்று நாம் நம்ப வேண்டும். சுத்தமான எண்ணங்களானது மனதிற்கு ஆரோக்கியம் தரும் ஆதாரம். புதுமையான நல்ல எண்ணங்கள் மனதிற்கு தெம்புதரும் விட்டமின் போன்றது. ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் மனதிற்கு பாதுகாப்பு மற்றும் வலிமை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றுகிறது. எனவே இன்றைய நாளில் நம் சபையிலும், குடும்பங்களிலும், உலகிலும் பல்வேறு உடல், மனநோயால் அல்லல்படும் சகோதர சகோதரிகளை அன்னையிடம் அர்ப்பணிப்போம். இப்பிரபஞ்சத்தில் அன்னைமரியாள் தூய எண்ணத்தோடு வாழ்ந்தவள். அத்தகைய தூய எண்ணம் கொண்டு நாம் வாழ, பிறரை வாழ வைக்க அருள் வேண்டுவோம் இந்நாளில்......

**பாடல்**

ஆசீரின் அன்னையே அடைக்கலத்தாயே !
ஆதரவற்றோரை அரவரணைப்பாயே !
ஆதாரம் நீயே என்று - உம்மையே !
நம்பி வந்தோம் அடைக்கலம் தருவாயே !

நோவும் சாவும் தாக்கியபோது
தாங்கி நின்றாய் தயவாய் எம்மை!
தரணிவாழ் மாந்தருக்குத் தாயானாய்!
தஞ்சமென்று வந்தவருக்குத் துணையானாய்!

தாய்மரியைத் தரணிக்குத் தந்த தந்தைக்கும்
தரணிவாழ தன்னுயிர் தந்த மகனுக்கும்
துணையாய் நிற்கும் தூய ஆவிக்கும்
துதிப்புகழ் பாடி மகிழ்கின்றோம். ஆமென்.

**முன்மொழி : 1 தாய்போல எம்மைக் கரம்பிடித்து வழிநடத்திய அன்னையே உம்மைப் போற்றுகிறோம்.**

- கடவுள் மீனைப் படைக்க விரும்பியபோது கடவுள் கடலோடு பேசினார்.
- கடவுள் மரங்களைப் படைக்க விரும்பியபோது கடவுள் பூமியோடு பேசினார்.
- மனிதனைப் படைக்க விரும்பியபோது கடவுள் தமக்குத்தாமே பேசினார்.
  பின்பு தனது சாயலிலே மனிதனை உண்டாக்குவோம் என்று மனிதனைப் படைத்தார். ஒருவேளை
- நீரில் இருந்து மீனைப் பிரிப்போமானால் மீன் இறந்துவிடும்.
- மரத்தை மண்ணிலிருந்து பிரிப்போமானால் மரம் இறந்துவிடும்
- இதைப்போலவே மனிதன் பிரபஞ்சத்தின் மூலமான இறைவனுடைய உறவை விட்டு பரிவானானால் மனிதன் மரித்து விடுவான்.

  இதனால்தான் இறைவன் அவரை விட்டு நாம் பிரியாமல் வாழ அன்னை மரியாளைக் கொடுத்துள்ளார். நம் அடைக்கலத் தாயிடம் நம்மையும் , உலக மக்களையும் ஒப்புக்கொடுத்துச் செபிப்போம். உலகில் பலவிதமான நோய்களினால் அவதிப்படும் நோயாளிகளை அன்னையின் பாதம் கொண்டு வந்து ஒரே மனதாய் செபிப்போம். அன்று கானாவூர் திருமணத்தில் தன் மகனிடம் பரிந்து பேசியது போல், இன்று உலகில் உள்ள நோயாளிகள் அனைவரும் நலம்பெற அன்னைமரியாள் தன் மகனிடம் பரிந்து பேச, அருள்வேண்டி இசைப்போம் இப்பாடலை.

  **பாடல் : இயேசுவே என்னுடன் பேசுவாயா…..**

**முன்மொழி : 2 நோயுற்றோரைக் குணப்படுத்தும் அன்னையே உம்மைப் போற்றுகிறோம்.**

தாமஸ் ஆல்வா எடிசன் சிறு குழந்தையாக இருக்கும்போது அவர் படித்த பள்ளியில் இருந்து அவரது தாயாருக்கு ஒரு கடிதம் கொடுத்து அனுப்பினர். அதைப்படித்ததும் அவருக்குக் கண்ணீர் பெருகியது. எடிசன் தன் தாயார் அழுததும் காரணம் கேட்டார். உடனே தாயார் “ நீ மிகவும் நன்றாகப் படிப்பதால் போதிய வசதிகள் அப்பள்ளியில் இல்லாததால் உன்னை வேறு பள்ளியில் சேர்க்கச் சொல்லியிருக்கின்றனர் என்றார்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு பல அரிய கண்டுபடிப்புகளை உலகுக்குத் தந்த எடிசன் தாயாரின் அறையைப் பார்வையிட்டார். அப்போது அங்கே ஒரு கசங்கிய நிலையில் காகிதம் இருந்தது. அது எடிசன் சிறுவனாக இருந்த போது பள்ளியில் இருந்து கொடுக்கப்பட்ட கடிதம். அக்கடிதத்தில் எடிசன் மனநலக்குறைபாடு உள்ளவராக இருப்பதால் வேறு பள்ளியில் சேர்க்கும்படி பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எடிசனின் பிஞ்சு மனதைக் காயப்படுத்தாமல் அத்தாயார் செயலாற்றினார். ஆதைப் பார்த்த போது எடிசனின் கண்களில் கண்ணீர் திரண்டது. பழைய நிகழ்வாக இருந்தாலும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

ஒரு சிறிய வார்த்தை வாழ்க்கையை புரட்டிப்போட்டுவிட்டது. இதுதான் பிரபஞ்ச சக்தியின் தூய எண்ணம். எனவே நம் வார்த்தைகளால் பிறருக்கு வாழ்வு கொடுப்போம். சிறப்பாக நம் சபையில் உடல், மனநோயினால் துன்பப்படும் சகோதரிகளை நமது தூய வார்த்தைகளால் ஊக்கப்படுத்தி, குணப்படுத்தி அவர்களின் வாழ்வுக்கு ஒளியாய் இருக்க அன்னை மரியிடம் அருள்வேண்டி செபிப்போம் இப்பகுதியை....

**வாழ்வியல் பயணத்தின் பறைமுழக்கம் - பக் :45**
**நோய் தீர்க்கும்....... நம்பி நிற்கிறேன்**

**முன்மொழி : 3 அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்று கூறிய அடைக்கலத்தாயே உம்மை வாழ்த்துகிறோம்.**

இயேசுவின் குணமளிப்பில் உடனிருந்த அன்னை மரியாள்….

- இராயப்பர் வீட்டிற்குச் சென்று இராயப்பரின் மாமியாரைக் குணப்படுத்தினார் ( மாற் 1: 29)
- நூற்றுவர் தலைவர் வீட்டிற்குச் சென்று பணியாளரைக் குணப்படுத்தினார். (லூக் 7 :1-10)
- தீர் என்ற இடத்தில் உள்ள ஒரு வீட்டில் ஒரு சிறுமியை பிடித்திருந்த பேயை ஓட்டினார். (மாற் 7: 24-30)
- நீர்கோர்வை நோயுள்ள ஒருவரைக் குணப்படுத்தினார். (லூக்14:1-6)
- தொழுகைக் கூடத்தலைவர் யாயீர் வீட்டில் அவரது இறந்த மகளை உயிர்த்தெழச் செய்தார். ( லூக் 8 :40-56)

இவ்வாறாக கடவுளின் படைப்பாகிய இப்பிரபஞ்சத்தை இறைமகன் இயேசுவும், அன்னை மரியாவும் அற்புதங்களையும், புதுமைகளையும் ஆற்றி வாழ்வு கொடுத்தனர், கொடுக்கின்றனர்….நாமும் நம் சபையில் நம்மோடு வாழும் சகோதரிகளை நல்ல எண்ணங்களால் அரவணைப்போம். வார்த்தைகளால் வாழ்வு கொடுப்போம் செயல்களால் செழிப்படையச் செய்வோம். இறைவார்த்தையால் இறையிடம் அழைத்துச் செல்வோம், அழைத்தலில் தடுமாறும்போது அன்னையிடம் அழைத்துச் செல்வோம். சகோதரிகள் பாதை மாறும் போது பரிசுத்தமாக்குவோம். இதுவே நாம் பிரபஞ்சத்தின் துணைகொண்டு

சகோதரிளுக்குச் செய்யும் ஒளிமயமான பேரன்பின் செயல்கள். எனவே கிறிஸ்துவின் வல்லமையையும், அடைக்கல தாயின் ஆசீரையும் நன்றியுணர்வையும் பெறுவோம் இப்பாடல் வழி அல்லது இறைவார்த்தை வழி.

- அப்பா உங்க வார்த்தைக்குத்தான் எத்தனை வல்லமை (அல்லது)
  லூக்கா 17 : 11-19

**இறைவார்த்தை :** லூக்கா 24 : 13- 32

**மன்றாட்டுக்கள் :**

**பதில் : உம் மகனிடம் பரிந்து பேசுவீராக**

- திரு அவையின் தேவைக்காக……..
- நம் சபையில் உடல், உள்ள நோயினால் துயருறும் சகோதரிகளுக்காக செபிப்போம்
- நம் குடும்பங்களில் நோயினால் அவதிப்படுபவர்களுக்காக வேண்டுவோம்
- உலகத்தில் பல்வேறு நோய்களினால் துன்பப்படுபவர்களுக்காக மன்றாடுவோம்.
- நாம் ஒவ்வொருவரும் எதிர்மறையான நோயிலிருந்து விடுபட செபிப்போம்.

இப்பிரபஞ்சத்தின் மூலமான இச்சொற்டொடர்களை இணைந்து செபிப்போம்.

## இறுதி செபம்

நிலம் வாழ்க ! நீர் வாழ்க ! நெருப்பு வாழ்க ! காற்று வாழ்க ! வெளி வாழ்க! சுத்த வெளி வாழ்க! அருள் நிலை வாழ்க! அருள் கடந்த நிலை வாழ்க! நம்மை ஈன்றெடுத்த அன்னை தந்தை வாழ்க! நமக்கு நல்வழிகாட்டிய சான்றோர் வாழ்க! நம் உடன் பிறந்தார் அனைவரும் வாழ்க! நம்முடன் பணிசெய்யும் அனைவரும் வாழ்க! சூழ்நிலைக் காரணமாக நம்மிடமிருந்து முரண்பட்டு, நமக்கு எதிராகச் சிந்திக்கின்ற, செயல்படுகின்ற, இவ்வாறு செயல்படுவதாக நாம் நினைக்கின்ற அனைவரும் வாழ்க - ஆமென்.